**DEPOSITION OF WITNESS(CIVIL)**
**IN THE COURT OF I ADDITIONAL JUDGE.**

**Case No. : O.S. No. 6889/2014** **Date: 18.03.2026**

**PW-1.**

Name : திரு. சஞ்சய் ஜெயமோகன்.

Father's Name :

Village :

Taluk :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 18th day of March 2026.

---

**இ.ம.எண். 09/2026 ல் பிறந்த உத்தரவின் அடிப்படையில் சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் கூடுதல் குறுக்கு விசாரணை :–**

நான் என்னுடைய முதல் விசாரணை வாக்குமூலத்தை படித்து பார்த்துள்ளேன். 1ம் வாதி என் அம்மா பரிமாள ஜெயமோகன் பெங்களூருவில் வசித்து வருகிறார். 2ம் வாதி சென்னையில் வசித்து வருகிறார். 3ம் வாதி பெங்களூருவில் வசித்து வருகிறார். நானும் பெங்களூருவில் வசித்து வருகிறேன். நான் பொறியியல் பட்டம் பயின்றுள்ளேன். என்னுடைய தாத்தா சுப்பிரமணியப்பிள்ளை தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்கு செலுத்த வேண்டிய தொகையில் பகுதி தொகை செலுத்தினார். அவர் இறந்த பிறகு என் அப்பா செலுத்திவந்தார். தொகை செலுத்தியதற்கான ரசீதுகளை

நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் என்னுடைய முதல் விசாரணை வாக்குமூலத்தில் கூரியுள்ள முகவரியில் 2006 முதல் வசித்து வருகிறேன். வழக்கு சொத்திற்குரிய சொத்து வரி மற்றும் மின்கட்டண தொகைகளை என் அப்பா செலுத்தினாரா என்றால் என் அப்பா அவரது சகோதரியை அந்த சொத்தில் அனுமதித்து அவரை செலுத்துமாறு கூறிவிட்டார். வழக்கு சொத்திற்குரிய சொத்து வரியை பிரதிவாதியும் அவரது கணவர் அண்ணாமலையும் செலுத்தினார்கள் என்றால் பிரதிவாதி லலிதாகுமாரி செலுத்தியது தெரியும், அவர் கணவர் செலுத்தியது எனக்கு தெரியாது. பிரதிவாதிகள் என்னுடைய உறவினர்கள். வழக்குரையில் பிரதிவாதிகள் பெயர் தவறாக குறிப்பிடுவதற்கு காரணம் என்ன என்றால் எங்களுக்கு தெரிந்த பெயர் விவரத்தை குறிப்பிட்டுள்ளோம். பி.சா.ஆ.8 கிரைய ஆவணத்தில் நான் சாட்சி கையெழுத்து போட்டுள்ளேனா என்றால் அந்த கிரைய ஆவணத்தில் சொத்தை விற்பனை செய்யும் அதிகார முகவர் என்ற நிலையில் கையெழுத்து இட்டுள்ளேன். சொத்தை பற்றி பேசுவதற்காக 2ம் பிரதிவாதி அண்ணாமலை சந்தித்துள்ளேனா என்றால் என் அப்பா சந்தித்துள்ளார், நான் அவரை சந்தித்துள்ளேன், சொத்து சம்பந்தமாக அவரிடம் பேசவில்லை. பி.சா.ஆ.7 ல் உள்ள அறிவிப்பு பலகையை நான் தான் வைத்தேன் என்றால் சரிதான். சொத்தை யாரும் ஆக்கிரமிக்கக்கூடாது என்பதற்காக வைத்தேன்.

வா.சா.ஆ.4 ஆவணத்தை நான் வழக்கிற்காக உருவாக்கியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. சொத்தை நான் அபகரிக்க வேண்டும் என்பதற்காக அதில் பெயர் பலகை வைத்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை :** இல்லை.

Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

Dt. 18.03.2026

I Addl. District Judge.